RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s158

# நந்திக் கலம்பகத்தில் அகத்திணைக் கூறுகள்

பா. நாகேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ.எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா

# A Study of Internal Elements in Nandi Kalambagam

P. Nageswari [a, *]

[a] Department of Tamil, Sri S. Ramasmy Naidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: nagesarumugathai@gmail.com

Received: 12-06-2022
Revised: 30-09-2022
Accepted: 12-10-2022
Published: 09-12-2022

Check for updates

## ABSTRACT

Most of the literature that sings the praises of the king appeared in the Nayak period as Sitrilakkiyam literature. Among such texts, Nandi Kalambagam was composed at the beginning of the Nayak period. The lady's love for King Nandi, Kurukottai, and the victory over the enemies at Thellaru are highlighted. The leader's life also has an inner and outer duality. There are several categories of internal elements in the literature. Among them, this research paper highlights the ideas based on the fields of drafting, standing by virtue, and unity in Nandi Kalambagam.

**Keywords:** Introspection, Sitrilakkiyam, Nayak period, Nandi Kalambagam, Intelligence, Chastity

## முன்னுரை

நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று கூறும் வகையில் பெரும்பான்மையாக மன்னரைப் புகழ்ந்து பாடும் இலக்கியங்கள் தோன்றின (Suja, 2021). அவ்வாறு அமைந்த நூல்களுள் நந்திக் கலம்பகம் நாயக்கர் காலத்தின் தொடக்க காலத்தில் உருவானது ஆகும். நந்தி மன்னன் மீதுக் கொண்ட தலைவியின் காதல், குறுக்கோட்டை, தெள்ளாற்றில் பகைவர்களை வெற்றிக் கொண்டச் சிறப்பும் எடுத்துக் காட்டப்படுகிறது. தலைவனின் அகம், புறம் என்ற இருதன்மை வாழ்க்கை நிலையும் இடம்பெறுகிறது. இலக்கியங்களில் அகத்திணைக் கூறுகள் பல பிரிவுகளாக உள்ளன. அவற்றுள் நந்திக் கலம்பகத்தில் இடம்பெறும் வரைவு கடாதல், அறத்தோடு நிற்றல், உடன்போக்கு என்ற துறைகள் அடிப்படையில் அமைந்த கருத்துக்களை எடுத்துரைப்பதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

## அகத்திணைக் கூறுகள்

அகத்திணை என்பது தலைவன், தலைவியின் (களவு, கற்பு) வாழ்க்கையை எடுத்துக் காட்டுவதாகும். அகவாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகளும், சூழல்களையுமே துறைகள் என்பர். அகத்திணைகள் கூற்றுக்களின் அடிப்படையிலேயே அமையும் அதனையே துறைகள் என்று வழங்கப்படுகின்றன. கலம்பகத்தில் நந்திக்கலம்பகம் முதலாவதாகத் தோன்றிய சிற்றிலக்கியம் ஆகும். நந்தி மன்னனின் வெற்றி சிறப்பு மட்டுமல்லாது தலைவன், தலைவியின் அகவாழ்க்கையும் விளக்கிக்கூறப்படுகிறது. நந்திமன்னன் பகைவர்களை குறுக்கோட்டை, தெள்ளாற்று போன்ற இடங்களில் வெற்றிக் கொண்டு தனக்குரிய சிறப்புப் பெயரை நிலைநாட்டிக் கொள்வதிலேயே ஆர்வம் கொண்டு விளங்குகிறான். தலைவன், தலைவியின் மனநிலையை அறிந்து கொள்ளாமல் இருப்பதை தோழி

உணர்ந்து வரைவு கடாதலை வலியுறுத்துகிறாள். மேலும் செவிலிக்கு அறத்தோடு நின்றும் தலைவியின் காதலை தோழி எடுத்துக்கூறுகிறாள். இவற்றை ஏற்கவில்லையென்றால் உடன்போக்கானது ஏற்பட்டு விடுமோ என்று செவிலி புலம்புகிறாள். இவ்வாறான அகத்திணை கூறுகள் நந்திக் கலம்பகத்தில் இடம்பெறும் தன்மையைக் காண்போம்.

## வரைவுகடாதல்

களவு தொடருவதற்கான வழியின்றி காதல் வாழ்க்கை நிலைக்கவும், தலைவிக்கு வரைவின் (திருமணம்) மீது விருப்பம் ஏற்பட்டதாலும் தலைவனிடம் புலப்படுத்துவர். தலைவனிடம் குறிப்பாகவோ, நேரடியாகவோ மணம் செய்து கொள்ளுமாறு வினவுவதே வரைவு கடாதல் ஆகும். நாற்கவிராச நம்பி அகப்பொருளில் வரைவு கடாதலை நான்கு வகைகளில் வெளிப்படும் என்று விளக்கியுள்ளார். அவை

"பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தல் என்று

ஒருநால் வகைத்தே வரைவு கடாதல்"

என்று வகைப்படுத்தியுள்ளார். தோழி தலைவனை விரைவிலேயே தனது தலைவியை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில பொய்யுரைகள் கூறியும், மறுத்துரைத்தும், கழறலும் (கண்டித்தும்), உண்மையை கூறுவதன் மூலமாகவும் இத்தகைய நிலைகளில் தலைவியின் நிலையைக் கூறி விரைந்து திருமணம் செய்ய வேண்டும் என்று தலைவனுக்கு எடுத்துக்கூறுவர் (Kabilar, 2010).

சங்க இலக்கிய அகநூல்களில் களவு ஏற்படும் சூழலாக அமைவது, தலைவி தோழி இருவரும் தினைப்புனம் காவலுக்குச் செல்வர். சென்ற இடத்தில் காட்டில் உள்ள கொடிய விலங்குகளால் துன்பம் ஏற்படும் போது தலைவன் அவர்களை காப்பாற்றுவதன் மூலம் தலைவன் தலைவி இருவருக்கும் காதல் நிலை ஏற்படும். இவ்வாறு களவு வாழ்க்கையானது ஏற்பட்டு ஒவ்வொரு நிலையாக கடந்து திருமண வாழ்க்கைக்குவழிவகுக்கும்.

"துய்த்தலை வாங்கிய புனிறு தீர் பெருங்குரல்

நல் கோள் சிறு தினைப் படு புள் ஓப்பி

எல் பட வருதியர் என விடுத்தலின்"

என்று தோழி கூறுவதாக அமைகிறது (Subramanian, 2010). தினைப்புனம் காவலுக்குச் சென்ற சூழலில் விலங்குகளால் துன்பம் ஏற்றபட இருந்த நிலையில் காப்பாற்றியதால் தலைவன் மீது அன்பு ஏற்பட்டதை விளக்குவதாக உள்ளது.

நந்திக்கலம்பகத்தில் தினைப்புனம் காவலுக்குச் சென்று காதல்நிலை ஏற்பட்டு தினமும் இருவரும் சந்திக்கின்றனர். அத்தகைய காலத்தில் தினைப்புனத் தினை விளைந்துவிட்டது. தலைவி தினைப்புனத்திற்கு வராத நிலையைக் கண்டு வீட்டிற்கு செல்கிறான். அந்த நேரத்தில் தோழி தினைக்கதிர் ஈனுகின்ற காலம் வந்துவிட்டது இனியும் களவொழுக்கத்தில் தலைவியைச் சந்திக்க முடியாது என்பதை உணர்த்துவதாககாட்டப்படுகிறது. நந்திக்கலம்பகத்தில் தலைவனை காணாததை எண்ணி தலைவி வருந்துகிறாள். அதனை,

"பண்டை மராமரம் எய்த பல்லவனே

தொண்டை ஒற்றுவள் இவள்தோள் வலையே"

பல்லவ மன்னனான மூன்றாம் நந்திவர்மன் பாட்டுடைத் தலைவனாகவும், அவர்களது மலராக தொண்டை மாலை சுட்டப்படுகிறது (Tamilperiyasamy, 2014). தலைவனின் நாட்டுசிறப்பை எடுத்துக்கூறி தலைவி உன்மேல் கொண்ட அன்பால் உன் தொண்டை மாலையை நினைத்துக் கொண்டிருக்கிறாள். விரைந்து வந்து திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறாள். இதனைப் போல் தலைவன் தெள்ளாற்றுப்போரில் பகைமன்னனின் படைகளை தனது வீரக்கழலால் வீழ்த்துகிறான்.

ஆனால் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் தலைவிக்கு வாடைக்காற்று, சந்திரன் இணைந்து துன்பம் தருகின்றன. தலைவியின் துன்பத்தைக் காணமுடியாத தோழி திருமணம் செய்துகொள்ள நந்திமன்னனை வலியுறுத்துகிறாள்.

தலைவனை நீண்ட நாள்கள் காணாமல் இருப்பதால் நினைத்து சாப்பிடாமல் வாடிக் கொண்டிருப்பாள். ஆதலால் தலைவி அணிந்திருக்கக் கூடிய கைவளையல்கள் கழன்று விழுமளவு தன்னையே துன்புறுத்திக் கொண்டிருக்கிறாள் என்று தோழி தலைவனிடம் கூறி திருமணத்தை எடுத்துக் கூறுவதாக அமைகிறது.

சங்ககாலம் தொட்டு இன்றைய காலம் வரையிலும் காதல் என்பது நிலைத்த ஒன்றாக உள்ளது. அன்றைய காலத்தில் பெண்கள் தனது களவு வாழ்க்கையை தோழிக்கும், தோழி தலைவனிடமும் கூறி திருமணம் செயல்கள் நடைபெறும். இன்றைய காலத்திலோ நேரடியாகவே தனது உள் எண்ணங்களை பெற்றோரிடம் வெளிக்காட்டி ஆசையை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

## அறத்தோடு நிற்றல்

அகப்பொருளில் அறத்தோடு நிற்றல் என்பது முதன்மையானதொரு கூற்றாகும். தலைவன், தலைவியின் களவு வாழ்க்கையை கற்பாக மாற்றுவதற்கு உறுதுணையாக அமைவது அறத்தொடு நிற்றலாகும். பெரும்பான்மையாக அறத்தோடு நிற்றல் நிலை தலைவியின் மன எண்ணமாகவே அமையும். அறத்தோடு நிற்றல் ஏற்படும் காலத்தினை நாற்கவிராச நம்பி அகப்பொருளில் எடுத்துக்காட்டுகிறார். அவை,

"ஆற்று ஊரஞ்சினும் அவன் வரைவு மறுப்பினும்

வேற்று வரைவு நேரினும் காப்புக்கை மிகினும்

ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே"

என்று இவற்றில் கூறப்படுகிறது. தலைவி தனது காதலை முதலில் தோழியிடமே கூறுவதாக இலக்கியங்களில் வெளிப்படுகிறது (Subash Chandra Bose, 2016). அதன் பிறகு தோழியின் மூலம் ஒவ்வொரு படிநிலையாக மாறி அவை வீட்டிற்கு தெரியப்படுத்தி திருமணம் நடைபெறுவதாக கூறப்படுகிறது. அவை,

"தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும்

பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்

செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும்

நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு

நிற்கும் என்ப நெறிஉணர்ந் தோரே"

என்று அறத்தோடு நிற்பவரின் தன்மையை விளக்குகிறார் (Subash Chandra Bose, 2016).

தலைவியின் உடனிருந்து களவு வாழ்க்கைக்கு மறைமுகமாக செயல்படுவது தோழி ஆகும். ஆதலால் தோழி தலைவியின் காதலை வீட்டிற்கு தெரியப்படுத்த முனைப்புடன் செயல்படுவாள். சரியான காலம் கிடைக்கும்பொழுதில் செவிலித்தாயிடம் கூறி களவை கற்பாக மாற்ற நினைப்பாள். குறுந்தொகை பாடல் ஒன்றில் குறிப்பிட்ட மலையைச் சார்ந்த தலைவனை விரும்புகிறாள். தலைவனை காணாத நிலையில் தன்னைத்தானே வறுத்திக் கொள்கிறாள். தலைவியின் உடல் நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இதனை அறிந்த செவிலித்தாய் குறத்தியை அழைத்து குறிக் கேட்கிறாள்.

"அகவன் மகளே! பாடுக பாட்டே!

இன்னும் பாடுக பாட்டே அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!"

குறத்தி குறி சொல்வதற்கு முன் தன் மலையை சிறப்பித்துக் கூறுவது வழக்கம். அவ்வாறு கூறுகையில் இன்னும் மலையை பாடுக என்று தோழி கூறுவாள் (Subramanian, 2010). தலைவியின் உடல்நிலையில் மாற்றம் ஏற்படுவதை உணர்ந்த செவிலித்தாய் அதனை உணர்ந்துக் கொள்வார். சங்க நூல்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு முழுவதும் அறத்தோடு நிற்றல் துறை அடிப்படையில் அமைந்த பாடலாகும். தினைப்புனம் காவலுக்குச் சென்ற சென்றதன் விளைவாக தலைவி தலைவனுக்கு களவு வாழ்க்கை ஏற்படுகிறது. தலைவனை காணாத சூழலால் தலைவி உணவு எதுவும் சாப்பிடாமல் தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்கிறாள். அதனால் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டுக் காணப்படும். அதன்பிறகு செவிலித்தாய் தலைவிக்கு என்ன நேர்ந்தது என்று கூறுகையில் தோழி கூறுவதாக அமைவது ஆகும். அவை,

“அன்னாய் வாழி வேண்டு அன்னை ஒண்ணுதல்

ஒலி மென் கூந்தல் என் தோழி மேனி

விறல் இழை நெகிழ்த்த வீவு அரும் கடுநோய்

அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்”

என்று செவிலித்தாயிடம் தலைவியின் உடல்நிலை மாற்றத்திற்கான நிலையைக் கூறி அறத்தோடு நிற்கிறாள் (Subramanian, 2010).

இவ்வாறாக நந்திக்கலம்பகத்தில் தலைவனையே நினைத்துக் கொண்டிருக்கிற தலைவியின் நிலையை அறிந்து தோழி அறத்தொடு நிற்பதாக விளக்கப்படுகிறது. தலைவியின் உடல் மாற்றநிலை அறிந்து செவிலித்தாய் தோழியிடம் வினவுகிறாள். தலைவி நந்தி மன்னனையே நினைத்திருக்கும் படியால் சோர்வுற்றும், தூக்கத்தை இழந்தும் அவனையே நினைத்துக் கொண்டிருப்பதால் இவ்வாறான நிலையில் காட்சியளிக்கிறாள் என்று தோழி கூறுகிறாள். அதனை,

“துய்க்குவித் தான்துயில் வாங்குவித் தான் துயில் வித்திவளை

வயக்குவித் தானுள்ளம் வஞ்சனையால்”

என்பதாகும். அதனைப்போன்று தலைவியின் நிலையை எடுத்துக்கூறும் விதத்தில் அறத்தோடு நிற்றல் நாராயணனின் வடிவமான நந்தி மன்னனின் தொண்டை மாலையை கண்டதன் பின்பே உயிரானது நிலைபெற்றது. இக்குறிப்புகளால் தோழி செவிலியிடம் உணர்த்துவதாக காட்டப்படுகிறது (Tamilperiyasamy, 2014).

தலைவியின் மாறுபாட்டைக் கண்ட நற்றாய் செவிலியிடம் வினவுகிறாள் அதற்கு பதில் கூறும் விதமாக அமைந்தது. தெள்ளாற்றுப் போரில் பகைவர்களை அஞ்சி ஓடுமாறு செய்தும், பகைவேந்தர்கள் நாளும் நினைத்து அஞ்சக்கூடிய சிறப்பிற்குரிய நந்தி மன்னன். அத்தகைய மன்னனை எண்ணியே தனது மகள் சங்கு வளையல்களை இழக்கிறாள் என்பதை உணர்கிறாள் நற்றாய். நந்திக் கலம்பகத்தில் இவ்வாறான சூழல்களில் அறத்தோடு நிற்கும் நிலை காணப்படுகிறது.

## உடன்போக்கு

தலைவன், தலைவியை தன்னுடன் வேற்றூருக்கு அழைத்துச் செல்லுதல் உடன்போக்கு ஆகும். தலைவன் தலைவியின் களவு வாழ்க்கை நீண்டநாள் நீடித்திருக்கும். இதனை அனைவரும் அறியும் முன்னரே தோழி அறத்தொடு நின்று, திருமணத்தை வலியுறுத்தச் செய்வாள். அதற்குமாறாக களவு வெளிப்பட்டும், ஊர்க்காரர்களின் அலர் பேச்சு, இல்லத்தில் இற்செரிப்பு போன்றவற்றால் தலைவி துன்பப்படுவாள். இனியும் களவொழுக்கத்தை நீட்டிக்க முடியாது என்னும் நிலை வரும்போது தலைவன், தலைவி இருவரும் யாருமறியாமல் இரவில் வேற்றூருக்குப் புறப்பட்டுக் களவொழுக்கத்தை பிறர் அறியுமாறு செய்தலே உடன்போக்கு ஆகும்.

அகத்திணை நெறியில் களவு வாழ்க்கை கற்பாக மாறுவதற்கு அதாவது பிறர் அறியுமாறு செய்வதற்கு இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று அறத்தோடு நிற்றல், மற்றொன்று உடன்போக்கு.

இவற்றுள் ஒன்று நிகழ்ந்தால் மற்றொன்று நிகழாது. அறத்தோடு நின்றபின் உடன்போக்கு நடக்காது. உடன்போக்கு சென்றபின் அறத்தோடு நிற்பதினால் பயனில்லை. இவற்றில் ஒன்றுதான் களவு வாழ்க்கை நிகழுவதற்கு அமையும். உடன்போக்கினை எட்டு வகையாக நாற்கவிராச நம்பி வகைப்படுத்தியுள்ளார். அவை,

“போக்கு அறிவுறுத்தல் போக்கு உடன்படாமை

போக்கு உடன்படுத்தல் போக்கு உடன்படுதல்

போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றல் என்று

யாப்மை உடன்போக்கு இருநான்கு வகைத்தே”

என்று இவ்வாறாக விளக்கப்பட்டுள்ளது. உடன்போக்கினை எட்டு வகையான நிலையிலே எடுத்துக்கூறி வலியுறுத்தலாகும் (Subash Chandra Bose, 2016).

கலித்தொகையில் உடன்போக்கை மேற்கொண்டு தலைவருடன் சென்றுவிடுகிறாள். எல்லா இடங்களிலும் தேடிவிட்டு வருகின்றனர். வரும்வழியில் அந்தணரைக் காண்கின்றனர். தன் மகளின் குறிப்பைக் கூறி இப்படிப்பட்டவர்களை கண்டீர்களா என்று கேட்கும்போது கண்டோம் எனப் பதில் தருகின்றனர். தலைவி சிறந்த ஒரு ஆண்மகனைக் கணவனாக வழிபட்டு அவனுடன் சென்றது நியாயமே எனக் கூறும் விதமாக அமைந்துள்ளது.

“பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை

மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்

நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே”

இயற்கையில் தோன்றிய சந்தனம், முத்து, இசை அவை பிறந்தது வேறு இடமாக இருந்தாலும் சேருமிடம் வேறு (Subramanian, 2010). அதுபோல் உன்மகளும் குறிப்பிட்ட பருவம் வரைதான் உனக்கு உரியவள் அதன்பின் அவள் தலைவனுக்கே உரியவள் என்பதை பக்குவமாக எடுத்துக் கூறுவதைக் காணமுடிகிறது.

நந்திக் கலம்பகத்தில் தலைவனுடன் உடன்போக்குச் சென்றதை அறிந்து செவிலி புலம்புவதாக அமைந்துள்ளது. தலைவி தன்னுடைய மைனாவையும், பந்தையும் தந்து செவிலித்தாயைத் தழுவிச் செல்கிறாள். அந்நிகழ்வின் குறிப்பை அடுத்தநாள் செவிலித்தாய் உணர்கிறாள். அவை,

“கோவையேய் நந்தி காக்கும் குளிர் பொழில் கச்சி யன்னாள்

பூவையும் பந்தும் தந்து புல்லினாள் என்னை என்னே

மாவியல் கானம் போந்தது அறிகிலேன் மதியிலேனே”

என்று எடுத்துரைக்கிறது. தலைவி உடன்போக்கை மேற்கொண்டு விட்டாள் என்பதை அறிந்து தன்னைத் தானே திட்டுவதாக காட்டப்படுகிறது "அறிவற்ற நான் விலங்குகள் திரியும் காட்டிற்கு அவள் செல்லவிருப்பதன் குறிப்பு இதுவென அறிந்திலேன்" என்கிறாள் (Tamilperiyasamy, 2014).

அதனைப் போன்று தலைவி செல்லக்கூடிய காட்டின் கடுமையான நிலையை செவிலிக் கூறுகிறாள். சிறப்புப் பொருந்திய காவிரி, குமரியாற்றுத் தலைவனுமான நந்திமன்னனின் வீரக்கழலைக் கண்டு பகைவரும் அஞ்சுகின்றனர். அவ்வாறு அஞ்சி பகையரசர்கள் வெப்பம் நிறைந்த காட்டுப் பகுதியில் செல்வர். அழகு, புன்சிரிப்பு நிறைந்த என்மகள் அத்தகைய கடுமையான வெப்பம் நிறைந்த பகுதியில் செல்வதை எண்ணி வருந்துவதாக விளக்கப்படுகிறது. இன்றைய காலத்தில் உடன்போக்கு என்பது இயல்பான செயலாக மாறிவிட்டது. முந்தைய காலங்களில் அறநெறியில் இருந்து தனது காதலை வெற்றிகரமாக மாற்றச் செய்வர். தன்னுடைய சந்தோசம் என்ற சுயநல எண்ணத்துடன் முடிவதாகவே இன்றைய காதல் வாழ்க்கை நிலையானது அமைகிறது.

நந்திக் கலம்பகத்தில் தலைவன் மீதுக் காதல் கொண்ட தலைவியின் மனநிலை எவ்வாறாக அமைந்தன என்பதை பற்றி விளக்குகிறது.

## முடிவுரை

நாயக்கர் காலத்தின் தொடக்கால இலக்கியங்களில் நந்திக் கலம்பகமும் ஒன்றாக திகழ்கின்றது. தலைவன், தலைவியின் களவை கற்பாக மாற்றுவதற்குரிய வரைவு கடாதல், அறத்தோடு நிற்றல், உடன்போக்கு ஆகியவை அமைவதற்கான நிலையை எடுத்துரைக்கிறது. நந்திக் கலம்பகத்தில் வரைவு கடாதலில் தலைவியின் உடல்நிலையில் மாற்றம் ஏற்படுவதைக் கண்டும், தலைவியை காணமுடியாத சூழலை எடுத்துக்காட்டியும் விரைந்து திருமணம் செய்து கொள்ள வலியுறுத்துவதை எடுத்துரைக்கிறது. அறத்தோடு நிற்பதற்கென்ற வரைமுறைகள் பல வகுக்கப்பட்ட நிலையிலும் தலைவியின் நிலையை செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும் எடுத்துக் கூறுவதாக அமைகிறது. உடன்போக்கு சென்ற தனது மகள் முந்தைய நாளில் செய்த செயல்களை குறிப்பாக தனக்கு உணர்த்தி இருப்பதை எண்ணி வேதனைஅடைவதாக காட்டப்படுகிறது. இவ்வாறாக நந்திக் கலம்பகத்தின் இடம்பெறும் அகத்திணைக் கூறுகளை விளக்குவதாக அமைகிறது.

## References


Kabilar, (2010) Kurunchipattu, Manivasagar Pathippagam, Chennai, India.

Subash Chandra Bose, S. (2016) Agamporul Villakkam, Eyal Pathippagam, Chennai, India.

Subramanian, S.V. (2010) Kalithogai, Manivasagar Pathippagam, Chennai, India.

Subramanian, S.V. (2012) Kurunthogai, Manivasagar Pathippagam, Chennai, India.

Suja, S. (2021) Nandhi Kalambagam's Agam Songs and its Rhetoric, International Research Journal of Tamil, 3(1), 247-254. https://doi.org/10.34256/irjt21127

Tamil Periyasamy, (2014) Nandhi Kalambagam, Paavai Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License